அ.வ.எண். 78/17

பெயர் - சோலையப்பன் (வா.சா.1)

நாள் - 10.07.2019

வாதி தரப்பில் கு.வி

நான் தற்போது பஞ்சாயத்து யூனியனில் வேலைபார்த்து ஓய்வு பெற்று விட்டேன். தாவா சொத்து ஆதியில் ராமர் குடும்பனுக்கு பாத்தியபட்டது என்றால் சரிதான். பட்டா எண் 77 என்றால் சரிதான். தாவா சொத்து மேலமலை கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். அதன் சர்வே எண் 313/1ஏ மொத்த விஸ்தீரணம் 864 ச.அடி தாவா சொத்தின் கிழக்கு பக்கம் சித்திரவேல் சொத்தும், மேற்கு பக்கம் மந்திரம் சொத்தும், தெற்கு பக்கம் முத்துக்குமார் சொத்தும், வடக்கு பக்கம் சுப்பையா சொத்தும் உள்ளது. தாவா சொத்தின் நீளம் அகலம் எனக்கு தெரியாது. ராமர்குடும்பனுக்கு பெருமா, முத்துபெருமா, ராக்கம்மாள் என்ற 3 குழந்தைகள் உண்டு என்றால் எனக்கு தெரியாது. ராமர்குடும்பனின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை. ராமர்குடும்பன் தபசில் சொத்துகளை பொறுத்து எந்த ஒரு ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார்என்றால் சரிதான். ராமர்குடும்பன் இறப்பிற்கு பிறகு அவருடைய 3 பெண் வாரிசுகள் மட்டும்தான் கூட்டாக சொத்தினை அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. சண்முகவடிவு தாயம்மாளின் அம்மா முத்துபெருமா என்று சொன்னால் தவறு. முத்துபெருமாவின் வாரிசுகள் தான் சண்முகவடிவு, தாயம்மாள் என்று சொன்னால் சரியல்ல. சண்முகவடிவும் தாயம்மாளும் முத்துபெருமாவின் பாகத்தினை வாதியின் தந்தைக்கு கிரையம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. ராக்கமாளின் வாரிசான இருளப்பன் 1968ம் ஆண்டு ராக்கம்மாளின் 3ல் ஒரு பங்கை வாதியின் தகப்பனாருக்கு கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் முழுபாத்தியதையும் அனுபவமும் வாதி வசம் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ1ல் சர்வே எண்.1256 என்று குறிப்பிடபட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ1 கூட்டுபட்டா என்றால் சரிதான். பீ.சா.ஆ1ல் ராமர் என்பவரின் வாரிசுகள் பற்றி குறிப்பிடவில்லைஎன்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ1ல் ராமர் மகன் லட்சுமணன், சுந்தரம்பிள்ளை மகன் செல்லசுப்பிரமணியபிள்ளை என்று குறிப்பிடபட்டுள்து என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ1ல் கண்ட சொத்து நெம்மேனி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தும் பி.சா.ஆ1ல் கண்ட சொத்தும் வெவ்வேறான சொத்து என்றால் சரிதான்.

பி.சா.ஆ1ல் கண்ட சொத்து வழக்குக்கு சம்பந்திமில்லாத சொத்து என்று சொன்னால் சரிதான். நான் முதல் விசாரணையில் என் தந்தை கிரையம் பெற்றதாக சொல்வது வழக்கிற்காக மோசடியாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்துகள் ராமையா, லட்சுமணன், முத்துராம் ஆகியோர்களுக்கு பாத்தியபட்டது இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தவிர ராமர்குடும்பன் பெயரில் வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ1ல் ராமையா, முத்துராம் ஆகியோர் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். நான் குறிப்பிடும் ராமையா, லட்சுமணன், முத்துராம் ஆகியோர்கள் ராமர்குடும்பனின் வாரிசுகள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கோவிந்தசாமியின் அப்பா பெயர் முத்துராம் என்றால் சரிதான். முத்துராம் மனைவி பெயர் தாயம்மாள். தபசில் சொத்துகளை மோசடி செய்ய வேண்டும் என்பதற்கா 4, 5 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றும் தபசில் சொத்துகளில் எங்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்ககூடியது என்றால் சரியல்ல. 4, 5பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையும் அனுபவமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. முத்துராமனின் மனைவி தாயம்மாள் அம்மா பெயர் எனக்கு தெரியாது. வாதி வழக்கில் கூறியுள்ள ராமர்குடும்பனும் பி.சா.ஆ.1ல் கண்ட ராமர் என்பவரும் வெவ்வேறான நபர்கள் என்றால் சரிதான். ராமர்குடும்பனின் வாரிசுகள் தான் வாதிகள் என்று சொன்னால் இல்லை. ராமர்குடும்பனுக்கு தான் ஆண் வாரிசுகள் இல்லை என்றும் 3 பெண் வாரிசுகள் தான் உண்டு என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் 4, 5 பிரதிவாதகளுக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணங்கள் சட்டபடி செல்லதக்கதல்ல என்றும் தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியபட்டு வாதிகள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் வாதிகள் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்ககூடியது என்று சொன்னால் சரியல்ல.

4, 5 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி

என் அப்பா பெயர் லட்சுமணன். என் தாத்தா பெயர் ராமர். அரசு ஆவணங்களில் என் அப்பா பெயர் ராமர்குடும்பன் என்று பெயர் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து என் தாத்தாவிற்கு பாத்தியபட்டது என்றால் சரிதான். வாரிசு அடிப்படையில் தான் தாவா சொத்தை 4, 5 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். என் தாத்தா பெயர் ராமர் என்று காட்டுவதற்காக பி.சா.ஆ1 யை தாக்கல் செய்தள்ளேன்.

ராமையா, லட்சுமணன், முத்துராம் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள்.